சேந்தமங்கலம் குடிநீர் வழங்குத் திட்டம்.

*வினா எண் 269—திரு. வ. சின்னசாமி : மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நாபக்கல் தாலுக்கா, சேந்தமங்கலம் பேரூராட்சிக்கு ரூ. 25 இலட்சம் செலவில் குழாய் மூலமாக கொல்லிமலை அடிவாரத்தில் இருந்து குடிநீர் கொண்டு வருவதற்கான திட்டம் இவ்வாண்டு எடுத்துக்கொள்ளப்பட உள்ளதா?

மாண்புமிகு திரு. எஸ். இராகவானந்தம் : ஆம்.

குளிர் சாதன வசதியுள்ள விரைவுப் பேருந்துகள்.

*வினா எண். 270—திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : மாண்புமிகு போக்குவரத்துத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

நீண்டதூர விரைவுப் பேருந்துகளுக்கு குளிர் சாதன வசதி செய்து (Air-Conditioned Super Express) விடுவதற்கு அரசிடம் ஏதேனும் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் ; ஆம்.

திரு. சின்னசேலம் மா. சுப்பிரமணியன் : பேரவைத தலைவர் அவர்களே, குளிர் சாதன வசதி பொறுத்தப்பட்ட நீண்டதூர விரைவுப் பேருந்துகள் தமிழ்நாட்டில் எத்தனை விடப்பட்டிருக்ருக்கின்றன? எத்தனை புதிய வழித்தடங்கலில் இத்தகைய பேருந்துகள் விடுவதற்கு அரசிடம் செயற்குறிப்பு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சி. பொன்னையன் : பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை—திருவனந்தபுரம் வழித் தடத்தில் இரண்டு குளிர்சாதன வசதிகள் பொறுத்தப்பட்டுள்ள பேருந்துகள் விடப்பட்டிருக்கின்றன. சென்னை—திருச்சி. சென்னை—சேலம்,